வாலிபர் நடுவில் எழுப்புதல்; வாலிபர் மூலம் நற்செய்திப்பணி!

www.bym-india.org




# Blessing

TAMIL பிப்ரவரி 2012

மலர் 41 இதழ் 2 எண் 431

பிரதி ரூ.10/-
ஆண்டுச் சந்தா ரூ.100/-

## மனிதர் உங்கள் நற்செயல்களைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

மத்தேயு 5:16

# ஏழைகளை நேசிக்க 50 வழிகள்

**டாக்டர் திருமதி லில்லியன் ஸ்டான்லி**

1. ஏழைகளைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அன்போடும் மரியாதை யோடும் அவர்களிடம் பேசுங்கள்.

2. அவர்களது பெயரைக் கேட்டு அவர்கள் குடும்பம் மற்றும் இல்லத்தைப் பற்றி விசாரியுங்கள். அவர்கள் தங்குமிடத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

3. பயணத்தின்போது கொடுக்க ஏழைகளுக்காகக் கூடுதல் ஒன்றிரண்டு சாப்பாட்டுப் பொட்டலங் களை எடுத்துக்கொள்ளுங்கள்.

4. சொந்தக் காரில் பயணம் செய்யும்போது சில பழைய, புதிய ஆடைகளைக் கொண்டு செல்லுங்கள். அனேகமாக வழியில் சில ஏழைகளைச் சந்திப்பீர்கள்.

5. உதவியற்றோருக்கு முகமலர்ச்சியுடன் கடன் கொடுங்கள்.

6. விதவைகள், பெண்கள், முதியவர், பெண் குழந்தைகள் போன்றோருக்கான அரசாங்கச் சலுகைகள் மற்றும் வங்கிக் கடன்களை விசாரித் தறிந்து ஏழைகளுக்கு அவை கிடைக்கச் செய்யுங்கள்.

7. தொழுநோயாளர், முதியோர், அநாதைகள், மனவளர்ச்சி குறைந்தோர், ஊனமுற்றோர், ஊமை, செவிடர் மற்றும் குருடர் இல்லங்களைக் குறித்து விவரங்கள் சேகரித்து ஏழைகளை அங்கு சேர்த்துவிடுங்கள். இப்படிப்பட்ட சில இல்லங்களுக்குக் கிரமமாகச் சென்று உதவி செய்யுங்கள்.

8. ஏழை மாணவர் படிப்பிற்குக் கல்விக் கட்டணம் கொடுத்துதவுங்கள்.

9. ஏழை மாணவருக்கு இலவச ட்யூஷன் எடுங்கள். கல்வியறிவற்றோருக்கு எழுதப்படிக்கக் கற்பி யுங்கள். இளைஞர் முதியோருக்குங்கூட சேரிகளில் கிரமமான வகுப்புகள் துவங்கலாம்.

10. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட ஏழைப் பிள்ளை களைத் தத்தெடுத்து கடவுளுக்காக வளர்க் கலாம். பிள்ளைகள் உடையவரும் தத்தெடுக்கத் தடையில்லை!

11. திக்கற்றோருக்கு ஒரு கருணை இல்லம் நடத்துங்கள்.

12. கல்கத்தாவிலுள்ள அன்னை தெரசாவின் கருணை இல்லத்தைப் பார்த்து வாருங்கள். அவர்களது மிஷனரிகளின் இல்லம் அண்மையில் எங்குள்ளதோ அங்கே சென்று கூடிய உதவி வாக்களியுங்கள்.

13. அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று நோயா ளிகளைச் சந்தியுங்கள். அவர்கள் சரியான சிகிச்சை பெறுகிறார்களா என்று பாருங்கள். இல்லையேல் மருத்துவர்களைச் சந்தித்து ஆவன செய்யுங்கள். குழந்தைகள் பிரிவிலுள்ள மிகச் சுகவீனமான குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் கொடுங்கள்.

14. ஏழைகளைச் சிகிச்சைக்கு மருத்துவர்களிடம் கூட்டிச் செல்லுங்கள்.

15. விதவைகள் மற்றும் ஏழைப் பெண்களுக்கு விவாகம் செய்து வையுங்கள்.

16. உங்கள் அண்மையிலுள்ள வறிய குடும்ப மொன்றைத் தெரிந்துகொண்டு அவர்கள் வாழ்வை முன்னேற்றுங்கள்.

17. எளியவரின் உரிமைகள் மற்றும் வழக்கு களுக்காய் வாதாடுங்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் நிலம் அபகரிக்கப்படும்போது தலை யிடுங்கள்.

18. பிச்சைக்காரருக்காய் ஆண்டொருமுறையாவது ஒரு நற்செய்திக் கூட்டம் நடத்தி நல்லதொரு உணவளியுங்கள்.

19. உங்கள் பிறந்தநாள், திருமண நாளன்று ஏழைகளை அழைத்து உணவளியுங்கள்.

20. நிறைய பலகாரங்கள் செய்து அல்லது வாங்கி பண்டிகைக் காலங்களில் வீட்டிற்கு வரும் ஏழைகளுக்குக் கொடுங்கள்.

21. ஆலயத்திற்கு வெளியே தருமம் வாங்கக் காத்து உட்கார்ந்திருப்போருக்கு ஒரு சுருக்கமான ஞாயிறு ஆராதனை நடத்துங்கள்.

22. எளிய குடும்பம் ஒன்றை எங்காவது விடு முறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

23. தோட்டத்தில் விளையும் சிலவற்றை ஏழை எளியவருக்காய்ப் பிரித்து வையுங்கள்.

24. பரண்கள், பெட்டிகள், அலமாரிகள், அடுக்குத் தட்டுகளைச் சுத்தம் செய்து ஓராண்டிற்கு மேலாகப் பயன்படுத்தாத பொருட்களைக் கொடுத்து விடுங்கள்.

25. சேரிகளில் கிறிஸ்து ஜெயந்தி பாடல்களைப் பாடிக்கொண்டு சென்று தள்ளப்பட்டோருக்கு

வாழ்த்துதல் அட்டைகளும் இனிப்பும் கொடுத்து வாழ்த்துங்கள்.

26. குட்டிக் குட்டி விளையாட்டுச் சாமான்கள், பலூன்கள் போன்றவற்றை மொத்த விற்பனைக் கடையில் வாங்கி வைத்துக்கொண்டால் ஏழைச் சிறுவர் சிறுமியர் கண்ணில்படும்போது கொடுத்து மகிழ்விக்கலாம்.

27. பணக்காரருக்கு வெகுமதிகளைக் கொடுத்து அவர்களிடமிருந்து வெகுமதிகளை வாங்கிக் கொள்ளும் பழக்கத்தை நிறுத்தி அப்பணத்தை ஏழைகளுக்குத் திருப்புங்கள்.

28. சேரிவாழ் மக்களுக்குக் கழிவறைகள் கட்டிக் கொடுங்கள்.

29. உங்கள் வருமானம் மற்றும் சொத்தில் பத்தில் ஒன்றை ஏழைகளுக்காய் ஒதுக்கி வையுங்கள்.

30. ஏழைகளுக்குத் தொண்டு செய்யும் ஒரு நிறுவனத்திற்கு உங்கள் பணத்திலும் சொத்திலும் ஒரு பகுதி உயில் எழுதி வையுங்கள்.

31. கைக்கு வரும் சில்லரைக்காசு யாவற்றையும் வறியவருக்கென்று ஒதுக்கி வையுங்கள்.

32. அதிகபட்சம் 10 நல்ல ஆடைகளும் 10 சாதா உடைகளும் வைத்துக் கொண்டு மற்றவற்றைத் தேவைப்பட்டோருக்குக் கொடுத்துவிடுங்கள்.

33. ஏழை வியாபாரிகளிடம் பேரம் பேசாதீர்கள்.

34. திருமண அன்பளிப்புகளில் ஒரே பொருள் ஒன்றிற்கும் அதிகமாக வந்தால் அவற்றைக் கடைகளில் மாற்றாமல் பாவப்பட்டவருக்குக் கொடுங்கள். பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளை களுக்கென்று சேமித்து வைக்காதீர்கள்.

35. பிள்ளையின் உடைகளை அடுத்த பிள்ளைக் கெனப் பத்திரப்படுத்தும் பழக்கத்தை விட்டொழி யுங்கள். அடுத்தப் பிள்ளை புதுத்துணிதான் போடட்டுமே!

36. பழைய புத்தகங்களை ஏழைகளுக்கு விநியோ கியுங்கள்.

37. இரப்போர் தங்கும் இடங்களில் பாடல் நிகழ்ச்சிகள் நடத்துங்கள்.

38. உணவுப் பொட்டலங்கள் தயாரித்து பிச்சைக்காரர் தங்குமிடங்களில் விநியோகியுங்கள். விருந்து நாட்களில் பிரியாணி போன்றவை மீதமானால் உறவினருக்குக் கொடுத்தனுப்பாமல் ஏழை களுக்குக் கொடுத்துவிடுங்கள்.

39. தங்க இடமில்லாதோருக்குக் குடிசைகள் கட்டித் தாருங்கள்.

40. எளியோரின் இடிந்த வீடுகளைச் சரிசெய்து உதவுங்கள்.

41. திக்கற்றோரைச் சந்தித்து அவர்கள் வீட்டைச் சுத்தம் செய்து நல்லதொரு உணவு சமைத்துக் கொடுத்து வாருங்கள்.

42. தினந்தோறும் பிச்சைக்காரரைச் சந்திப்பது உங்கள் வேலைக்கு இடையூறானால் ஒவ்வொரு மாதத்தின் முதல் தேதி அல்லது முதல் ஞாயிறு அவர்களை வரப் பழக்குங்கள். அப்பொழுது அவர்களுக்குப் போதித்து, தருமம் கொடுத்து, ஜெபித்து அனுப்பலாம்.

43. எளிமையான வாழ்க்கை முறையைப் பின் பற்றினால் வறியவருக்குக் கூடுதல் செல வழிக்கலாம்.

44. சேரிப் பிள்ளைகளுக்கு விளையாட்டுகள் மற்றும் போட்டிகள் நடத்துங்கள். ஷட்டில் காக், கால் பந்து, கேரம் போர்ட், செஸ் போர்ட் போன்றவை வாங்கிக் கொடுங்கள். ஊஞ்சல் போன்ற சிலவற்றைப் பொருத்திக் கொடுங்கள்.

45. நீங்கள் மருத்துவர் அல்லது தாதியரானால் ஆதிவாசிக் கிராமங்கள் மற்றும் அவைபோன்ற இடங்களில் தங்கி, உங்கள் அறிவையும் பயிற்சியையும் பயன்படுத்தி மக்களை உங்களுக்குத் தெரிந்த வழிகளிலெல்லாம் முன்னேற்றுங்கள்.

46. எளியவரின் வீடுகளுக்கு விஜயம் செய்து அவர்களது நண்பராயிருங்கள். அவர்களது திருமணங்கள், மரணங்கள் மற்றும் பிற வைபவங் களில் கலந்துகொள்ளுங்கள்.

47. பொறுமையாய் எளியவரது அவல நிலையின் சோகக் கதைகளைக் காதுகொடுத்துக் கேட்க நேரமெடுங்கள்.

48. தேய்ந்த செருப்பு மற்றும் கிழிந்த உடைகளைச் செப்பனிட்டுப் பயன்படுத்தாமல் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் சில மாதங்கள் அவற்றை அனுபவிக்கலாமே.

49. சாலையோரத்தில் யாரேனும் விழுந்து கிடப்பதைக் கண்டால் நில்லுங்கள். உயிரோடிருக்கிறாரா என்று பாருங்கள். செத்திருந்தால் நல்லடக்கம் செய்ய நகராட்சிக்கு அறிவியுங்கள். உயிருட னிருந்தால் ஆவன செய்து உதவுங்கள்.

50. விருந்தினர் மற்றும் அயலகத்தார் உங்கள் வீட்டிற்குக் கொண்டுவரும் பலகாரங்களை அவசியமாய்த் தின்றுத் தீர்க்கவேண்டுமென்பது கட்டாயமல்ல. பகிர்ந்து தின்றால் பசியாறும் !

*(இக்கட்டுரையை நகல் எடுத்து விநியோ கிக்கலாம்)*

# வாழ்க்கைப் பயணம்!

***R. எஸ்மி ரொபினா***

சீட் பெல்டைப் போட்டுக் கொள்ளுங்க பசங்களா, இது வாழ்க்கைப் பயணம்! வருக வருக! நீங்கள் சேருமிடம் பரலோகம். உங்கள் நோக்கம் பரலோக அப்பாவுடன் என்றென்றுமாய் வாழ்வது. உங்கள் வேலை உங்கள் இதயத்தை இப்புனித யாத்திரையில் பதிப்பதே. நாம் இந்தக் கோளத்திலேயா இருக்கப் போகிறோம்? இல்லையே. "உம்மிலே பெலன் கொள்ளுகிற மனிதனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்" என்கிறது சங்கீதம் 84: 5 (ஆங்கில வேதம் காண்க). நாம் யாத்ரீகர், பயணிகள், கடந்து போகிறவர்கள்; ஆகவே இவ்வுலகத்தின் குப்பைகளைப் பற்றிக்கொள்ளா மலிருப்பது நலம். நாம் தங்கியிருக்கும் விடுதிகளிலி ருந்து மனதை எடுத்து நமது மெய்வீடாகிய மோட்சத்தில் பதிப்போம். வாழ்க்கைப் பயணத்தைத் துவங்க ஆயத்தம்தானா? ஒரே நிமிடம் பொறுங்கள். "வாழ்க் கைக்கு நடத்துவது எது?" என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். நீதிமொழிகள் 19:23இல் "கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது" என்று வாசிக்கிறோம். இப்போது பயணத்தைத் தொடருவோம்.

வாழ்க்கைப் பயணத்தில் ஐந்து காரியங்களைக் குறித்து அறிந்திருப்போமானால் நமது பயணம் சுமுகமாகவும் சந்தோஷமாகவும் அமையும்.

### 1. வாழ்க்கையின் பிரதானம்

பிரபல பிரசங்கி ஒருவர், "வாழ்க்கை ஊழியத்தைவிட முக்கியமானது" என்றார். உண்மைதானே? புதிதாக என்ன வந்திருக்கிறது என்று சூப்பர் மார்க்கெட்டிற்கு ஓடி ஓடிப் பார்க்கிறோம் அல்லவா? அதே முக்கியத்துவத்தை வேதத்திற்குக் கொடுப்போமானால் பயணம் விமானப் பயணம்தான். முழு இருதயத்தோடு தேவனைத் தேடுபவரையே தேவனது கண்கள் தேடுகின்றன. ஆகவே உன் வாலிப நாட்களில் தேவனைத் தேடுவாயானால் வாழ்வு முழுவதும் அதற்காய் குதூகலிப்பாய்.

மத்தேயு 1:1-17 இயேசுவின் வம்சவரிசையை அடுக்கியுள்ளது. அங்கே கரி பூசப்பட்ட சிலர் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? வசனங்கள் 3, 5, 6இல் தன் மாமனாரின் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவி தன்னோடு படுக்கச் செய்த தாமாரையும், இஸ்ரவேலருக்கு உதவிசெய்த அன்னியநாட்டு வேசியாகிய ராகாபையும், தன் மாமியாருக்கு உறுதுணையாயிருந்த, காலணா காசில்லாமல் இஸ்ரவேல் தேசத்திற்குள் குடிபுகுந்த விதவை ரூத்தையும், விபச்சாரத்தில் தாவீதின் பங்காளியான உரியாவின் மனைவி பத்சேபாளையும் குறித்துப் படிக்கிறோம். இயேசுவின் வம்சவரிசையில் இவர்கள் இடம்பெற்றது ஏன் என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா? பாவிகளை இரட்சிக்கவே இயேசு உலகத்தில் வந்தார் என்ற கூற்றை நிரூபிக்கவும், சாதாரண இவர்கள் அசாதாரண வித்தியாசத்தை உண்டு பண்ணினவர்கள் என்பதற்காகவும் இருக்கலாமோ? உங்கள் வாழ்க்கை எத்தனை வித்தியாசத்தை உண்டு பண்ணுகிறது என்பதை நீங்கள் உணராமல் இருக்கலாம். கிறிஸ்தவன் என்ற வார்த்தையிலேயே கிறிஸ்துவை உடையவன் என்ற பொருள் அடங்கியுள்ளது. நீங்கள் மெய்யாகவே கிறிஸ்துவை உடையவர்களானால், அந்தகாரமான இவ்வுலகில் மற்றவர்களுக்கு வெளிச் சமாக இருப்பீர்கள்.

### 2. வாழ்க்கையின் ஊற்று

எசேக்கியேல் 37:1-14இல் கடவுள் எலும்புகளுக்கு உயிரூட்டிய உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கைக் காணலாம். மரணம் வேதனை நிறைந்ததுதான். ஒரு கனவோ அல்லது உறவோ மரித்துப்போனதை அனுபவித்திருக்கிறீர்களா? உங்களுக்கு அருமையா னவர் மரித்துப்போனது போன்ற ஆழ்ந்த துக்கத்தை அது உண்டாக்கக்கூடும். ஆன்மீக மரணம் — பாவத்தினால் கடவுளை விட்டுப் பிரிக்கப்படுதலாகிய மரணமே தேவனைக் கண்கலங்கச்செய்வது. ஆன்மீகத்தில் மரித்துப் போயிருப்பவர்களை உயிரூட்டக் கூடிய தம் வல்லமையைக் காட்டும்படியாக அந்தப் பள்ளத்தாக்கில் சில எலும்புக் கூடுகளுக்கு உயிர் கொடுத்தார். உயிருக்கு ஊற்றான தேவன் மட்டுமே உங்களது மரித்துப்போன கனவுகளுக்கும், உறவுகளுக்கும், ஆன்மாவிற்கும் உயிரூட்டக்கூடும். உலர்ந்த எலும்புக் குவியல்போல உணருகிறீர்களா? தேவனிடம் திரும்புங்கள். திருடர்கள், அல்லது ஆன்மீகப் போலிகள் பூமியில் வாழும் மக்களது வாழ்வைக் கெடுக்கவே வருகின்றனர்; இயேசுவோ வாழ்வை, நிறைவான வாழ்வைக் கொடுக்கவே வந்தார் என்று யோவான் 10:10இல் இயேசு கூறுகிறார். நீங்கள் தேவனை அறியவும் அவரை நேசிக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவேதான் இயேசு வந்தார்— நீங்கள் கற்பனைக் கெட்டாத பரிபூரண

ஜீவனை அனுபவிக்கும்படியாக "வாழ்க்கை தேவனது அழகிய ஈவு" என்று சரியாகத்தான் சொல்லப்படுகிறது.

### 3. வாழ்க்கையின் நோக்கம்

"வாழ்க்கை என்பது மலரானால் அன்பு அதன் தேன்" என்றார் விக்டர் ஹ்யூகோ. இந்த அன்பு இறைமகனாகிய இயேசுவின் மூலம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. கடவுளுடைய அன்பு எவ்வளவு பெரிதாயிருந்திருக் குமானால் கிரயத்தையும் பாராமல் நமக்காக மிகச் சிறந்த அற்புதமான வரப்பிரசாதத்தை திட்டமிட்டிருப்பார்! ஆகவே நாம் வாழும்படியாக அன்போடு, தன்னிச்சையாய் தன்னை மரணத்துக்கு ஒப்புவித்த தமது குமாரனை அனுப்பினார். நல்ல வாழ்க்கை வாழ்வதினால் நாம் சொர்க்கத்திற்குள் நுழைந்துவிட முடியாது. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஆத்துமாவில் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். "நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" என்று ரோமர் 14:8 கூறுகிறது. நமது வாழ்வு கர்த்தருக்கே உரியது என்று அறிவது எத்தனை ஆறுதல். நீங்கள் நண்பர்களிலும், குடும்பத்திலும், பணத்திலும், துணிமணிகளிலும், அழகிலும், பாலுறவிலும், குடியிலும், போதை மருந்துகளிலும் வாழ்வைத் தேடலாம். ஆனால் வாழ்வின் நோக்கத்தை ஒரே ஒரு இடத்தில்தான் கண்டுபிடிக்க முடியும்: இயேசுவில்! அவரிடம் மட்டுமே நித்திய ஜீவ வார்த்தைகள் உண்டு. சீமோன் பேதுரு யோவான் 6:68இல் சொன்னது போல வாழ்வின் நோக்கத்தை அவரில் மட்டுமே தேடுங்கள்.

### 4. வாழ்க்கையின் எதிரி

சாத்தானின் சோதனைகள் கண்ணி வெடிபோல் நமது பாதையில் ஏராளம் புதைக்கப்பட்டிருக்கின்றன. பிசாசை எதிர்த்து நிற்க நமக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தேவை. "இரண்டு நற்காலிகளுக்கு இடையே உட்கார்ந்திருப்பவன் சுலபமாக விழுந்துவிடுவான்" என்பது பழமொழி. உலகத்தில் ஒரு காலும் கிறிஸ்துவில் ஒரு காலும் வைத்திருப்போமானால் இலகுவாக வாழ்வின் சோதனைகளில் மாட்டிக் கொள்வோம். வாலிபருக்கே உரித்தான 2 தீமோத்தேயு 2:22, "பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதா னத்தையும் அடையும்படி நாடு" என்ற வசனம் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக விளக்குகிறது. வாலிபனொருவன் தனது புது காலணிகளை அணிந்துகொண்டு ஓட்டமாக ஓடுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். எதையோ விட்டு அடித்துப் புரண்டு ஓடுகிறான். எதைவிட்டு ஓடுகிறான்? "வாலிபவயதின் இச்சைகளை" விட்டு, பரிசுத்தத்திற்குப் பதிலாகப் புகழையும், பிறர் நலத்திற்குப் பதிலாக சுயநலத்தையும் தேவனது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்வதற்குப் பதிலாக அவற்றை சந்தேகித் தலையும் விட்டு ஓடுகிறான். எதைப் பிடிப்பதற்காக தலைதெறிக்க ஓடுகிறான்? நீதி, விசுவாசம், அன்பு, சமாதானம். கிறுக்குத்தனமாகத் தெரிகிறதா? ஆனால் இதுவே சிறந்த வாழ்க்கைக்கு சீரான வழி. ஆகவே நண்பனே காலணிகளை அணிந்துகொண்டு ஓடு!

### 5. வாழ்க்கையின் முதலுதவிப் பெட்டி

வாழ்க்கையில் படும் அடிகளுக்கு முதலுதவி தேவைதானே? உதவியின்றி பயணத்தை நம்மால் முடிக்கவியலாது. ஆகவே பயணத்திற்குத் தேவையான யாவற்றையும் அடக்கியுள்ள 2 பேதுரு 1:3,4ஐக் காண்போம். "... ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமையானது நமக்குத் தந்தருளி... இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி..." அன்றன்றைக்குத் தேவையான எல்லா சாதனங்களும் நம் வசம் இருப்பின் வசதிதானே. நமக்கு "ஜீவனுக்கும் தேவபக்திக்கும்" தேவையா னவற்றைக் கொண்ட பெட்டி, தேவனால் கொடுக்கப்பட் டுள்ளது. தேவனை அறிகிற அறிவினாலே நமது தேவைகளெல்லாம் சந்திக்கப்படுகின்றன. அவரது வல்லமையினாலும் வாக்குத்தத்தங்களினாலும் தேவனை அறிந்தோம் — அவரில் நமது தேவைகளை யெல்லாம் கண்டு கொண்டோம். சகலத்தையும் உள்ளடக்கியுள்ள இந்த அற்புதப் பெட்டகத்திற்காக கர்த்தரைத் துதிப்போம். சகல சத்தியத்தையும் அறிய நீங்கள் வேத வல்லுநராக இருக்கத் தேவையில்லை. கிறிஸ்தவ வாழ்வு கையெட்டுந் தூரத்தில்தான் இருக்கிறது.

இந்த ஐந்து படிகளைக் கடந்து வந்தீர்களா? இப்போது வெற்றிப் பயணத்தைத் துவங்க பயணச் சீட்டு உங்கள் கையில் வந்துவிட்டது. யோவான் 17:3இன்படி நீங்கள் ஒரு விசுவாசியானால் உங்கள் நித்திய வாழ்வு இப்போதே துவங்கிவிட்டது. பரலோகப் பாதை வரவரப் பிரகாசமாகும். ஆனால் பரலோகம் சேரும்வரை காத்திருக்கத் தேவையில்லை. இப்போதே இயேசுவை அறியத் துவங்குவீர்களானால் "ஆகா, இதுவல்லவோ நித்திய வாழ்வு" என்பீர்கள். ஓட்டத்தை இப்போ துவங்குங்கள் பார்க்கலாம்...

*(எஸ்மி நமது மிஷனரிகள் எஸ்தர்-ராபினது மகள் (குஜராத்). ஆங்கில இலக்கியத்தில் முதல் ஆண்டு படிக்கிறாள். பெற்றோர் கைபேசி:* ***09428657370****)*

# ரெகொபோத் — இளைப்பாருமிடம்

இருபத்தொரு வயது நங்கையாக இளநிலை மனஇயல் பயிலும்போது, சிறப்புப் பள்ளியொன்றில் பயின்ற மனவளர்ச்சிகுன்றிய பிள்ளைகளைக் குறித்து ஆய்வு செய்யும் ஒரு பயிற்சி இருந்தது. இப்படிப்பட்ட வாலிப நங்கையர் நீண்ட விடு முறையில்கூட வீடு வருவது விரும்பப்படவில்லை என்பதை அறிந்து கொண்டேன். தேவை நிறைந்த இவர்களுக்கு என்னாலியன்றதைச் செய்ய தேவன் என்னை ஏவினார்.

திருமணமாகப்போகும் நங்கையொருத்தி இத்தனை பெரிய ஊழியத்தில் நாட்டம் காட்டுவது, ஒளிரும் ஒரு மணமகன் தன் மணமகளில் எதிர்பார்க்கும் குணமா என்பது கேள்விக்குறிதான். ஆனால் தேவனோ எனது எதிர்கால ஊழியத்திற்கு ஏற்ற துணையையே ஆயத்தப்படுத்தியிருந்தார்.

திருமணத்திற்குப் பிறகு இருவருமாக ரெகொ போத்தை தர்ம அறக்கட்டளையாக டிசம்பர் 1998இல் பதிவு செய்தோம். மனவளர்ச்சி குன்றிய வர்களாக தெருவில் திரியும் அநாதைப் பெண்களைக் காப்பாற்றி பாதுகாப்பதே இதன் நோக்கமாகும். இரண்டு பெண்களோடு துவங் கியது இது. அதில் ஒருவருக்கு பல பலவீனங்கள் (பார்வை, பேச்சு, கேட்பதில் குறைவு). இப்போது தெருவிலிருந்து காப்பாற்றப்பட்ட 170 பெண் களுக்கு ரெகொபோத் அடைக்கலமாயிருக் கிறது.

கைவிடப்பட்டால் நோய்களுக்கும் பட்டி னிக்கும் ஆளாவதோடு இவர்கள் துர்பிரயோகத் திற்கும் இரையாவதால் இவர்களுக்கே முதலிடம் கொடுக்கிறோம். ஒவ்வொருவரும் சேர்க்கப்பட் டவுடன் முதலாவதாக கர்ப்பம் மற்றும் HIVக்கே பரிசோதிக்கப்படுகின்றனர்.

இவர்களுடன் வேலைசெய்யும்போது நாங்கள் கண்டறிந்தது என்னவென்றால் இவர்களது மனது அல்லது உடல் பாதிப்படைந்தவுடன் குழந்தைகளோடு நிராகரிக்கப்படுகின்றனர். எங்களுக்கிருந்த வசதிகளின் அடிப்படையில் பிள்ளையை அநாதை இல்லத்திற்கும் தாயை காப்பகத்திற்கும் அனுப்புவதன்றி வேறு வழி யில்லை.

ஆகவே தாய் சேய் நலம் கருதி இவர்கள் ஒன்றாக இருக்கத்தக்கதாக, காப்பகமும் வேலை பயிற்சியும் கல்வியும் கிடைக்கத்தக்கதாக ARISE என்கிற அமைப்பு உருவானது. குடும்பம் தானாக இயங்கும்படியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனி அறை கொடுக்கப்படுகிறது. இந்த இடம் சென்னை பரணிப்புத்தூரில் உள்ளது.

பொதுவாக தெருவில் கண்டெடுக்கப்படும் இவர்கள் திறமையற்றவர்களாகவும், மலம் மற்றும் சிறுநீர்கூட ஏற்ற வேளையில் ஏற்ற இடத்தில் கழிக்கத் தெரியாதவர்களாகவும் இருப்பர். 30 அல்லது 40 வயது பெண்களும்கூட ஆறுமாத குழந்தையைப்போல் இருப்பதால் சதா கவனிக் கப்பட்டு சுத்தம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. எளிய குடும்பத்திலிருந்து வரும் இப்படிப்பட்டப் பிள்ளைகள் சிகிச்சைக்கோ, விசேஷித்தப் பயிற்சிக்கோ பணவசதியற்றவர்கள். இவர்கள் தங்களையே பராமரித்துக்கொள்ளப் பயிற்சிக்கப் பட்டிருப்பரேயானால் தமது குடும்பங்களுக்குப் பாரமாக இருந்திருக்கவும் மாட்டார், கைவிடப்பட் டிருக்கவும் மாட்டார்.

இக்காரணங்களினால் எளிய மற்றும் பின் தங்கிய குடும்பங்களிலிருந்து வரும் இப்படிப்பட்ட குழந்தைகளை சீக்கிரமாய் கண்டுபிடித்து, நாளடைவில் கைவிடப்படுவதைத் தவிர்க்க 2004இல் முயற்சிகள் எடுக்கப்பட்டன. தற்போது சுற்றுப்புறத்திலிருந்து 22 பேர் பிணி நீக்கும் உடற்பயிற்சிகளும் சிறப்புக் கல்வியும் தாய்மார் ஆலோசனையும் இலவசமாகப் பெற்று வருகின்றனர்.

இப்பெண்களிடமிருந்து நாங்கள் கற்றுக் கொண்ட பல பாடங்களில் ஒன்று 'மன ஆரோக்கியத்திற்குச் சிறந்த மூலிகை இயற் கையே.' எமது பெண்கள் தோட்டத்திலும், பறவைகள், மிருகங்கள் மத்தியில் வேலை

செய்யும்போதும் மிகுந்த உற்சாகமடைவதோடு அப்பணிகளை முடித்தபின் மனநிலையில் முன்னேற்றத்தோடும் காணப்படுகின்றனர். ஆகவே பன்றி, ஆடு, மாடு வளர்ப்பு, கோழிப் பண்ணை, விவசாயம், கைவேலை, தையல், மெழுகுவர்த்தி செய்தல் போன்ற சுய உதவித் திட்டங்களை குறைவான பாதிப்புடையோர்



செய்கின்றனர். இப்பணி எமது பிரதான மையத்திலிருந்து 25 கி.மீ தொலைவிலிருக்கும் சோமங்கலம் என்ற கிராமத்தில் நடைபெறுகிறது.

ரெகொபோத்திற்கு உதவி, தெரிந்த நண்பர் களிடமிருந்து வருவதே. இவ்வாண்டுகளி லெல்லாம் எங்கள் பரம திருப்தி எங்கள் பெண்கள் ஆண்டவரை அறிந்து கொள்கிறார்கள் என்பதே. மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கென்று ஒரு பகல் காப்பகமும் உண்டு. இவர்களுக்கு இலவச கல்வி, சிகிச்சை, போக வர பயண வசதிகள் உண்டு.




எங்களுக்காக ஜெபியுங்கள்; வந்து பாருங்கள்; தவிக்கும் அநாதைப் பெண்களை அனுப்பி வையுங்கள்; பொருளுதவியினால் தாங்குங்கள்.

*திருமதி சொரைடா சாமுவேல்: 9884080863*

# DEW - 2012

*வார்த்தையை விதைக்கும் திட்டம்*

“மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்” (ஏசாயா 55:10,11).

வாழ்க்கையை மாற்றக்கூடிய விலையேறப் பெற்ற புத்தகங்களையும் குறுந்தட்டுகளையும் ஈந்து தேவன் *ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை* ஆசீர்வதித்துள்ளார். இந்த தேவ வார்த்தைகளை நீங்கள் விதைத்து, பெருத்த அறுவடையைக் காணலாம். இந்த DEW—2012 திட்டத்தில் நீங்களும் இணைந்து பின்வருமாறு செயல் படலாம்.

@ பிறந்தநாள் மற்றும் மணநாள் கொண்டா டுபவர்களுக்கும் ஊழியருக்கும் நண்பருக்கும் மணமக் களுக்கும் ஆலோசனைக்கு வருபவர்களுக்கும் இவைகளை அன்பளிக்கலாம்.

@ நண்பருக்கும் உறவினருக்கும், ஜெபக் குழு அங்கத்தினருக்கும் இவற்றை விற்கலாம்.



@ திருமண விருந்தினருக்கு தேங்காய், பழம் கொடுப்பதைவிட ஒரு புத்தகத்தைக் கொடுப்பது சாலச் சிறந்ததாகும்.

@ ரூ 2200 பெறுமான துவக்கப் பொட்டலம், நீங்கள் எங்களைக் கூப்பிட்டுச் சொன்னால், உடனடியாக உங்கள் வீட்டு வாசலுக்கே அனுப்பி வைக்கப்படும். நீங்கள் ரூ.2000 மட்டுமே செலுத்தி அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

*தொடர்புக்கு T. கிஃப்ட் செல்வின், கோவை 9443193860*

# செத்துக்கொண்டிருப்பவருக்கு உதவுவதில் பயனுண்டோ?

தலைமையகத்தில் பிரதி மாதம் ஒன்றாம் தேதி நடக்கும் *மாணிக்கக் கூட்டத்திற்கு* நாங்கள் பொறுப்பாயிருக்கிறோம். சுமார் 55 மிகவும் எளியவர் வந்து தர்மம், காலை உணவு மற்றும் மருத்துவ உதவி பெற்று நற்செய்தியும் கேட்டுச் செல்கின்றனர். மாதத்திற்கு ஒருவரது வீட்டிற்குச் சென்று விசாரித்து உதவ முயற்சிக்கிறோம்.



நவம்பர் ஒன்றாம் தேதி கூட்டத்தை முடித்து விட்டு ஒரு தொழுநோயாளி வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தோம். வழியில், பஸ் நிற்குமிடத்தில் வயதான ஒருவர் நடைபாதையில் விழுந்து கிடப்பதையும் அவரது கால்கள் ரோட்டில் நீட்டிக் கொண்டிருப்பதையும் கண்டோம். பார்த்தால், எங்கள் கூட்டத்திற்கு மிகுந்த கஷ்டத்தோடு ஒழுங்காக வரும் குப்புசாமி அவர். அவரது தொடை எலும்பு முறிந்து அசையமுடியாமல் கிடந்தார். அவரது கால்கள் இரண்டிலும் குஷ்டப்புண்கள் இருந்ததால் கால்களைப் பிடித்து தூக்கி நடைபாதையில் போடத் தயங்கினோம்.

அவர், "என்னைக் குறித்துக் கவலைப்படாதீர்கள், என் ஆண்டவர் என்னைப் பார்த்துக்கொள்வார். என் ஆண்டவர் என்னோடிருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார். எங்களுக்கு ஆச்சரியமாயிற்று. நாங்கள் பிரசங்கித்த வசனங்கள் எவ்வளவாய் இவர்களது உள்ளங்களில் வேரூன்றியிருந்தது என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டோம்! அவர் ஆரணியிலிருந்து (30கி.மீ) கூட்டத்திற்கு வந்திருக்கிறார். பேருந்திலிருந்து இறங்கும்போது ஓட்டுனர் அவசரமாக வண்டியை எடுத்துவிட்டதால் கீழே விழுந்துவிட்டிருக்கிறார். பஸ் ஸ்டாப்பின் கூட்டத்தில், குறைந்தது இரண்டு மணி நேரங்கள் கிடந் திருக்கிறார்.

அரசு மருத்துவமனையிலிருந்த எங்கள் நண்பர் Dr. சித்ராவிற்குப் போன்செய்தபோது அவர்கள் 108ற்குப் போன்செய்யக் கூறினார்கள். அரைமணி நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. இப்போது அவரது கால்களைப் பிடித்துத் தூக்க எங்களுக்கு தைரியம் வந்தது. அரசு மருத்துவமனைக்கு நாங்களும் சென்றோம். பொதுவாக துணைக்கு ஆளில்லாமல் நோயாளியை மருத்துவ மனையில் சேர்ப்பதில் லையாம்; ஆனால் அற்புதமாக அவசரப்பிரிவு மருத்துவர் அவரைச் சேர்த்து விட்டார்.

இவருக்கு உதவியாள் கண்டுபிடிப்பது இப்போ எங்கள் வேலையாயிற்று. வயதான, படுத்தபடுக் கையிலிருக்கும் தொழு நோயாளியை யார் கவனிப்பர்? ஒரு அற்புதத் திற்காக ஜெபித்து முயற்சி செய்யலானோம். மறுநாள் வேறொரு தொழு நோயாளி அவரது மனைவியை அனுப்ப முன் வந்தார். மூன்றாவது சிக்கலைத் தீர்த்துவைத்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத் தினோம். அவருக்கு அறுவை சிகிச்சைசெய்ய போதுமான ஏதுகரணங்கள் இல்லாததால் ஐந்து நாட்கள் கழித்து மருத்துவர்கள் அவரை அனுப்பிவிட வேண்டுமென்றனர். அவரை எங்கே எடுத்துச் செல்வோம்? அவரது நிலைமை மோசமானவுடன் மருத்துவர்கள் எடுத்துச்செல்ல அவசரப்படுத்தினர். டாக்டர் சித்ராவும் அவரது துணைவர் டாக்டர் செந்தில் குமாரும் எங்களுக்கு அனுகூலமாக அவரை கூடுதல் நாட்கள் மருத்துவமனையில் வைத்துக் கொள்ள உதவினர். 12ஆவது நாள் அவர் மகிமைக்குள் பிரவேசித்தார். அவரது பைக்குள் ஒரு புதிய ஏற்பாட்டைப் பார்த்தவுடன் அவர் ஆபிரகாமின் மடியிலிருப்பார் என்று நிச்ச யமானோம்.

இந்நாட்களில் இன்னொரு சுவாரஸ்யமான விவரத்தை அறிந்துகொண்டோம். சில மாணிக் கங்கள் ரூ.15 செலவழித்து நாங்கள் கொடுக்கும் ரூ.15ஐப் பெற்றுக்கொள்ள வந்தனர். அதைக் குறித்து நாங்கள் வினவியபோது, "நாங்கள் காசுக்காக வரவில்லை, கூட்டத்தில் பங்குபெற வருகிறோம்" என்றனர். எங்கள் இருதயங்கள் பெருமிதமடைந்ததோடு பலனைப்பெற்ற திருப் தியும் அடைந்தோம்.

மரித்துக்கொண்டிருப்பவருக்கு உதவுவது தேவை தானா? நிச்சயமாக. நாங்கள் அவரை நடைபாதையில் மரிக்கவிடவில்லை. இறுதிவரை அவருக்கு நல்ல படுக்கையும் உணவும் கிடைத் ததோடு கண்ணியமாக மரித்தார். இயேசுவின் சிறிய தம்பிக்கு உதவி செய்ததுபோன்றதொரு உணர்வு எங்களை ஆட் கொண்டது.

*— ஜெயா & ஜூலியஸ்*
*மிஷனரிகள், தலைமையகம்*

# முருகூடு சபை



1994இல் மிஷனரிகள் மஹாராஷ்டிராவிலுள்ள தார்லே கிராமத்தைச் சந்தித்தனர். அங்கு திருமதி திவாடே என்ற கிறிஸ்தவ சகோதரி தன் தங்கை முருகூடிலிருப்பதாகவும் ஒரு இந்துவைத் திருமணம் செய்திருப்பதாகவும் கூறினார்கள். மிஷனரிகள் அவர்களை முருகூடில் சந்தித்து அவர்கள் வீட்டில் ஒரு ஜெபக்கூட்டம் துவங்கினர். பன்னிரெண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் இதில் கலந்து கொண்டனர். இதில் திருமதி நிர்மலாவும் அவர்களது குடும்பமும் திருமுழுக்குப் பெற்றனர். இவர்களது வீட்டு உரிமையாளரான திருமதி கமல் கும்ளே இவர்கள் மூலமாக இரட்சிக்கப் பட்டார்கள். கமல் மிகுந்த பண நெருக்கடியில் இருந்ததோடு குடிகாரனான கணவரிடம் அடியும் வாங்குவார். தன் நான்கு சிறு பிள்ளைகளோடு தினமும் ஆண்டவரை நோக்கி கண்ணீர் விடுவார். இப்போது அந்த முழு குடும்பமும் இரட்சிக்கப்பட்டு நான்கு பிள்ளைகளும் பொறியியலராக உள்ளனர்.

தொடர்ந்து மிஷனரிகள் ஒரு அறை வாடகைக்கு எடுத்து அதில் ஜெபக்கூட்டத்தை நடத்தினர். இன்று, மிஷனரிகளின் உழைப்பிற்கு சாட்சியாக அங்கே ஒரு ஆலயம் எழும்பியுள்ளது. புதிதாகக் கட்டப்பட்ட *இயேசு கிறிஸ்து உபாசனா மந்திர்*, கோலாப்பூர் மாவட்டத்திலுள்ள முருகூடில் 16.12.2011 அன்று அர்ப்பணிக்கப்பட்டது. உள்ளூர் தலைவர் திரு. பிரவீன், ரிப்பனை வெட்ட உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் நினைவுக் கல்லைத் திறந்து வைத்தார். பல சபைகளிலிருந்து வந்த ஆயர்கள் விழாவில் கலந்து கொண்டனர். வீல்டர் மெமோரியல் ஆலய ஆயர் D.B. மறைதிரு. சமுத்ரே (கோலாப்பூர்), தேவசெய்தியை அளித்தார். 300 பேர் ஆராதனையில் பங்கேற்றனர். மெய்யாகவே இறையரசு கடுகு விதைக்கு ஒப்பானதுதான்!

— *சாமுவேல் ஜோதிராஜ்*

# திருத்துதல் திருவுபதேசம்

திருவசனம் நமக்குப் ''போதிப்பது'' மட்டுமல்லாமல், நம்மைத் ''திருத்தவும்'' செய்கிறது (2 தீமோ 3:16,17). இந்த அடிப்படையில், 2008 நவம்பர் முதல், சகோதரன் ஸ்டான்லி வியாழன்தோறும் இரவு 9.30 முதல் 10 வரை, ஆங்கிலத்திலிருந்து தமிழில், **தமிழன்** தொலைக் காட்சியில் உபதேசித்து வருகிறார். இதுவரை *ஜெபம், வேதத் தியானம், கொடுத்தல், ஆராதனை, போராட்டம், ஊழியம், சிந்தித்தல், மனந்திரும்புதல், விசுவாசம், பாடனுபவித்தல், திட்டமிடுதல், வேலை செய்தல், ஆன்மீக வரங்கள், ஐக்கியம், பரிசுத்தம், துக்கித்தல்* ஆகிய தலைப்புகள் உபதேசிக்கப்பட்டுள்ளன. ஜனவரி 19 முதல் இப்பொழுது ஒளிபரப்பாகும் தொடர்—

***How not to Help***
***எப்படி உதவிசெய்யக்கூடாது?***

கட்டாயம் பாருங்கள்!

கடைசியாக ஒளிபரப்பாகிய கீழ்க்கண்ட இரு தொடர்கள் இரட்டை ஒளித்தட்டுகளில் வழக்கம்போல வெளிவந்துள்ளன—

- ***How not to Sanctify***
  ***எப்படிப் பரிசுத்தப்படக்கூடாது?***
- ***How not to Sorrow***
  ***எப்படித் துக்கிக்கக்கூடாது?***

இரு ஒளித்தட்டுகளடங்கிய ஒவ்வொரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 25/-

கிடைக்குமிடம்:

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600002
*Tel: 00 91 44 28450411*

# அடர்காடுகளூடே ...!

*திருமதி ராணி ஜோனத்தான், நீலகிரி*

பணிஓய்வு என்பது பலருக்கு கார்மேகமாய் இறங்கினாலும் எனக்கு அது வெள்ளி விடியலாய் மலர்ந்தது. செய்ய வேண்டிய பலவற்றைச் செய்ய திடீர் சிறகுகள் முளைத்தன. ஆசீர்வாதம் பத்திரிகையின் ஆயுள் சந்தாதார் நான். ஒடிசாவிற்குச் சென்று நேரடியாகப் பணித்தளத்தைப் பார்க்க ஓர் ஆவல் மனதில் துளிர்விட்டது. இப்பயணம் எங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கவில்லை.

சென்னையிலிருந்து ஆந்திர எல்லையிலுள்ள விஜயநகரத்திற்கு ரயில் பயணம் சுகமாயிருந்தது. நானும் மகள் சுமனும் அடுத்தநாள் மதியம் ஒடிசாவிலுள்ள ஜெய்பூருக்கு டாக்சி பயணத்தை மேற்கொள்ள உற்சாகத்துடனிருந்தோம். அந்த 217 கி.மீட்டரை கடக்க பஸ் சாவதானமாக 6-7 மணிகள் எடுக்கிறது. காடுகள் ஒரு பக்கமும் சரிவு மறுபக்கமுமான பாதை கொள்ளை அழகு. குண்டும் குழியுமான, மழையினால் அரிக்கப்பட்ட பாதை எங்களைத் தூக்கித் தூக்கிப் போட்டது. சில இடங்களில் ஊர்தி ஊர்ந்து ஊர்ந்து சென்ற தோடல்லாமல் முன்னே சென்ற வாகனங்கள் கிளப்பிய தூசி கண்ணை மூடி மறைத்தது. புது அனுபவங்களான இவைகளை நாங்கள் சுவாரஸ் யத்துடன் அனுபவித்தோம்.

ஜெய்பூரில் நாங்கள் அர்ப்பணிப்போடு ஊழியம் செய்யும் கிறிஸ்டோபர்-கிறிஸ்டினா தம்பதியர் மற்றும் அவர்களது அருமைக் குழந்தைகள் ஹன்னி, ஜோஷனுடன் தங்கினோம். ஒடிசா பணித்தளங் களுக்கு ஒருங்கிணைப்பாளராகச் செயல்படும் கிறிஸ்டோபர், மிஷனின் வேலை நடைபெறும் உட்பகுதிகளில் அதிகமாக பயணம் செய்யும் அலுவல் நிறைந்தவர். இருவரும் ஒடியா மொழியைத் தீரக் கற்று ஒடிசாவை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியால் நிரப்ப வைராக்கியம் கொண்டவர்கள். கிறிஸ்டினா 25ற்கும் அதிகமான உள்ளூர் கல்லூரி மாணவிகளோடு தன் வீட்டில் கூடி கிறிஸ்துவின் வழியில் அவர்களை நடத்துகிறாள். சமுதாயத்தால் தள்ளப்பட்டவர் களுக்கான ஒரு ஆசிரமத்தை குழுவாகச் சந்தித்து வருகிறார்கள். தங்கள் உணவையும் கிறிஸ்துவையும் அவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிறார்கள். இயேசு தானே ஜீவ அப்பம்! அவர்களுக்கான ஜெபங்கள், அற்புதங்களையும் சுகமாகுதல்களையும் பதிலாகப் பெறுகின்றன. தற்போது காப்பக ஊழியரால் சில எதிர்ப்புகளைச் சந்தித்தாலும் சளைக்காமல் பணியைத் தொடருகின்றனர்.

ஜெய்பூரிலிருந்து உமர்கோட் 108 கி. மீட்டரிலுள்ள ஊர். இங்கு 40 ஆதிவாசி நங்கையரைக் கொண்ட ஒரு விடுதியை நமது மிஷனரிகள் நடத்தி வருகின்றனர். பலர் இங்கேயே வளர்ந்து கல்லூரிப் பருவத்தையும் அடைந்துள்ளனர். இவர்கள் பரஸ்பர அன்புடனும் மகிழ்ச்சியாகவும் உள்ளனர். எனது மகள் கற்றுக்கொடுத்த பாடல்களை வாஞ்சையுடன் கற்றுக்கொண்டு வசனத்தை வாயில் ஈ போவது தெரியாமல் கவனித்தனர்.

ஜெய்பூரிலிருந்து 80 கி.மீ. தொலைவிலுள்ள நமது இராமகிரி மையத்தில் 40 பையன்களைக் கொண்ட ஒரு விடுதியும் ஒரு சிறு ஆலயமும் ஊழியர் வீடுகளும் இருக்கிறது. சில ஆண்டுகள் டாக்டர் ஜெய்சங்கர் இங்கு வாழ்ந்து மக்களது நோய் தீர்க்கப் பணியாற்றினார். உலகத்தால் மறக்கப்பட்டுப்போன இந்த எளிய மக்களுக்கு அடிப்படை மருத்துவ உதவிகளைச் செய்யக்கூடிய ஒரு மருத்துவரோ அல்லது ஒரு தாதியரோ இப்போது தேவை.

அருகிலுள்ள செர்க்கா கிராமம் சென்று BYM பகல் காப்பகத்தைப் பார்த்தோம். இங்கு 300க்கும் அதிகமான ஆதிவாசிப் பிள்ளைகள் உணவூட்டப் பட்டு அடிப்படை பயிற்சி பெற்று பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். தூங்கிக் கிடக்கும் இந்தக் கிராமங்களுக்கு மத்தியில் இப்படிப்பட்ட சுறு சுறுப்பான பணி நடைபெறும் மையத்தைக் கண்டும் பிள்ளைகளின் இன்முகம் பார்த்தும் அகமகிழ்ந்தோம். மற்ற இடங்களில் கோடைக்கால கொளுத்தும் வெயிலும் மழைக்கால கொட்டும் வானமும் பனிக்கால நடுக்கும் குளிரும் 2-3 மாதங்கள் உள்ளூர் பள்ளிகளை மூடிவிடக் காரணங்களா கின்றன. சாலை மற்றும் வாகன வசதிகளின்மை இந்நாட்களில் இவ்விடங்களைச் சந்திப்பதை சாதனையாக்கிவிடுகின்றன. அடிப்படை வசதிகளி

ருக்குமானால் இந்நிலை மாறலாம். நமது அன்றாட நடவடிக்கைகள் இவ்விடங்களில் அருங்காரியங்களா யிருக்கின்றன.

சாலைகளும் ஒற்றையடிப் பாதைகளும் காடுக ளுக்குள் பிரிந்து சென்று நவீனம் எட்டாத கிராமங்களைச் சென்றடைகின்றன. ஆனால், தேவனுக்கு மகிமை உண்டாவதாக, நமது மிஷனரி களின் அயராத உழைப்பினால் பெரும்பாலான கிராமங்களை நற்செய்தியின் வாசனை ஊடுருவியி ருக்கிறது. பல குடும்பங்கள் பலதெய்வ வணக் கத்தின் கோரப்பிடியிலிருந்துத் தப்பி ஜீவனுள்ள தேவனை அண்டிக்கொண்டுள்ளனர். இங்கு நக்சல் நடமாட்டம் இருந்தாலும் இப்போது நமது சகோ தரருடன் பிரியமாகப் பழகத் தொடங்கியுள்ளனர்.

கிராமவாசிகள் எளிமையான சுபாவமுடைய வர்களாகவும், பயிர்வளத்தையே நம்பி வாழ்கிறவர் களாயுமுள்ளனர். இவர்களது முக்கியப் பயிர்களான நெல்லும் சோளமும், கண்ணுக்கெட்டிய தொடு வானம் வரையுள்ள செழிப்பான விளைநிலத்தில் பயிரிடப்படுகின்றன. எவ்விதக் கட்டடங்களோ நவீன வாழ்க்கையின் அடையாளங்களோ அற்ற திறந்த வெளிகளில் காற்றில் அசைந்தாடும் இவற்றின் மணம் காசு கொடுத்தாலும் கிடைக்காது. நன்றாக முன்னேறக்கூடிய இடம். இயற்கை வளங்களை முழுமையாய்ப் பயன்படுத்த இவர்களுக்கு நவீன முறைகளும் விவசாய அறிவும் புகட்டப்பட வேண்டும். இப்பின்னடைந்த பகுதிகள் இந்திய வரைபடத்தில் இடம்பெறச் செய்ய இன்னொரு யுக்தி சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதாகும்.

எங்கெல்லாம் பணிக்களங்களிலுள்ள விசுவாசி களைச் சந்திக்கச் சென்றோமோ அங்கெல்லாம் புன்னகை அணிந்த ஆதிவாசிப் பெண்கள் எங்கள் கால்களில் குளிர்ந்த தண்ணீர் ஊற்றி அன்புடன் வரவேற்றனர். வேதக் கலாச்சாரமாகிய இது, அவர்கள் எங்களை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதற்கு அடையாளமாம். உலர்ந்து போய் தூசிபடிந்த எங்கள் தொண்டையில் குளிர்பானம் பட்ட ஓர் உணர்வைக் கொடுத்தது இது. மேலே சிலுவை, சிறிய பிரசங் கபீடம், குட்டித் திருமுழுக்குத் தொட்டியையுடைய ஆலயக் கட்டிடங்களை கண்காணாத இப்பகுதிகளில் கண்டு அசந்து போனோம். எளிமையும் உண்மை யுமான இவர்களது ஆராதனை எங்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தன. பரிசுத்த ஆவியில் நிறைந்து அந்நிய மொழிகளில் பேசி விடுதலையோடு தேவனை ஆராதிக்கும் இவர்களது குழந்தைபோன்ற களங்கமற்ற விசுவாசத்தைக் கண்டு அதிசயித்தோம்.

காணாமலும் கேளாமலும் இருந்தவர்கள் இப்போது கண்டு புரிந்துகொள்ளத்தக்கதாக கிறிஸ்து அறியப்படாத இடங்களுக்கு நற்செய்தி போகவேண் டுமென்ற ரோமர் 15:20-21இல் எழுதப்பட்ட வார்த்தையின் நிறைவேறுதல் இதுவே. சவால் நிறைந்த சூழ்நிலைகள்தான். ஆனால் உங்களுக்கு ஒரு அழைப்பு இருக்குமானால், துடிப்பிருக்குமானால், மக்கள்மேல் அன்பும் இயற்கையின்மேல் நேசமுமிருக் குமானால், எல்லாவற்றிற்கும்மேல் ஆண்டவர்மேல் ஆழ்ந்த நம்பிக்கை இருக்குமானால், உங்களுக்குரிய இடம் இதுவே!

ஒடிசாவில் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் செய்யும் பரந்த ஊழியத்தின் சிறு மூலையை மட்டுமே நாங்கள் பார்த்து வந்தோம். எங்களது குறுகிய காலப்



*பிரிகுடா விசுவாசிகளுடன்*

பயணத்தைக் குறித்து இன்னும் அதிகமாக எழுதிக்கொண்டே போகலாம் — பார்த்த மற்ற இடங்கள், சந்தித்த, அபிஷேகம் பெற்ற சகோதர சகோதரிகள், எங்களது தன்னிகரற்ற அனுபவங் களினால் நாங்கள் பெற்ற ஆசீர்வாதங்கள், இப்படி ... ஆனால் இப்போதைய தேவை — ஒடிசா மக்களுக்கு நமது ஜெபமும் உதவியும்தான். நிச்சயமாய் அதைக் கொடுப்போம் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

# பணிக்களச் செய்திகள்

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் 322 மிஷனரிகள் அசாம், ஆந்திரம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒடிசா, கர்நாடகா, குஜராத், கேரளம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய 14 மாநிலங்களில் தங்கி ஊழியம் செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலா னோர் மாற்றுக் கலாச்சார சூழலில் நற்செய்தியறிவித்து சபை நிறுவுவதிலும், மற்றவர்கள் எழுப்புதல் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். வந்துள்ள ஏராளமான செய்திகளில் எதை விடுவது எதைத் தொடுப்பது என்று தெரியவில்லை. இருப்பினும் அறுவடை செய்த கோதுமையில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து உங்கள் ஜெபத்திற்காகவும் துதிக்காகவும் தொகுத்தளிக்கிறோம்.

**அசாமில்** மிஷனரி லீன்ஸ் ஜோயல் தேவனது வார்த்தையை ஜோர்ஹட்டிலுள்ள *ஈஸ்வர் பிரேம் பாப்திஸ்து சபையில்* பகிர்ந்து கொண்டார். பலிச்சாப்புரி கிராமம் கிரமமாக சந்திக்கப்பட்டு வருகிறது. கடந்த சந்திப்பில் 30 பேர் நற்செய்தியைக் கேட்டனர். இங்கு ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்பட்டு ஆறுபேர் பங்கு பெறுகின்றனர். மிஷனரி சோமசுந்தரம் மஜுஊலியிலுள்ள *லொக்மி* ஆலயத்தில் தேவவார்த் தையைப் பகிர்ந் தளித்தார். *புல்லுகிரி பாப்திஸ்து சபை, ஜோர்ஹட் கிறிஸ்தவ மருத்துவ மைய தாதியர் பள்ளி* மற்றும் *பார்பெட்டா பாப்திஸ்து சபையிலும்* வசனத்தைப் பகிர்ந்தளிக்க நமது மிஷனரிகளுக்கு தேவன் வாசலைத் திறந்தளித்தார்.

பெண்களுக்கான ஒடுக்கக் கூட்டங்கள் மஜுஊலியிலும் (12ஜன) ஜோர்ஹட்டிலும் (26 ஜன) நடந்தன. செழியனும் பிரேமலதா செழியனும் செய்தியளித்தனர். இரண்டாவது குழந்தைக்குத் தாயாகப்போகும் மிஷனரி சரிதா சோமசுந்தரத்திற்காக ஜெபியுங்கள்.

**சத்தீஸ்கர்** மிஷனரிகள் சூரியவான்ஷி மற்றும் சபரியா ஆதிவாசிகளுடன் முதல் கிறிஸ்துமசைக் கொண்டாடினர். உள்ளூர் ஊழியர் சங்கர்லால் ஹன்ஸ்ராஜ் இவர்கள் மத்தியில் கம்ரிக், கர்நூத், தால் தேவாரி, கோஸ்மந்தா, துர்கோட் மற்றும் திர்ரா என்ற இடங்களில் பணியாற்றி வருகிறார். திருமதி கீதா ஹன்ஸ்ராஜ் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்கிறார்கள். இரத்தன்பூரில் நமது ஊழியத்திற்கு உறுதுணையாயிருக்கக்கூடிய ஒரு குடும்பம் கிடைத் துள்ளது. தொடர்ந்து இவ்விட ம் சந்திக்கப்படும். ராய்பூரில் கிறிஸ்தவரல்லாத நமது தொடர்புகளுக்காக கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது.

**கர்நாடகா** மிஷனரிகள் சிறகு முளைத்ததுபோல் அங்குமிங்கும் பறந்து பலவற்றைச் சாதிக்கின்றனர். 50 வயதான சாந்தி பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றாள். கெகதா கிராமத்தில் 30 பேர் கூடி ஜெபித்து தேவனை ஆராதிக்கின்றனர். இதற்கு ஒரு இடம் தேவைப்படுகிறது. ஜத்கா கிராமத்தில் ஆராதனைக்கு ஆன்ட்ரூ தனது வீட்டில் ஒரு அறையை அளித்துள்ளார். பச்சனஹதள்ளி கிராமத்தில் மக்கள் ஆராதிக்க மிஷனரிகள் மார்ச் மாதத்தில் ஒரு குடில் கட்டியிருந்தனர். கொட்டும் மழையில் சமீபத்தில் அது விழுந்து விட்டது. உறுதியான கட்டடம் கட்டப்பட ஜெபியுங்கள்.

சித்ஹி ஆதிவாசி பையன்களுக்கான விடுதி நமக்குண்டு. ஆனால் பெண்பிள்ளைகள் படிக்காமலும் கவனிக்கப்படாமலும் இருக்கின்றனர். துரதிர்ஷ்டசாலி களான இவர்களுக்கு விடுதிக்காக ஜெபியுங்கள். விசுவாசிகள் பெருகி சபைகள் எழும்புகின்றன. இதனால் மிஷனரிகளின் கால்கள் கட்டப்படுகின்றன. அன்றி, ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் எழும்புவார்களானால் இறையரசைக் கட்டியெழுப்ப மிஷனரிகள் தொலை விடங்களுக்குச் செல்லலாம். தேர்ந்த விசுவாசிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களே ஆடுகளை மேய்ப்பதற்காக பயிற்சி கொடுக்க மிஷனரிகள் எடுக்கும் முயற்சி களுக்காக ஜெபியுங்கள். நாளடைவில் இந்த மூப்பர்களே சபைக்குப் பொறுப்பாகலாம். விசுவாசி நித்யாவிற்காக தேவனைத் துதியுங்கள். குழந்தை பாக்கியம் இல்லாததற்காக அனுதினமும் தன் அவிசுவாசியான கணவனிடம் அடிவாங்கிய இவள் இப்போது கர்ப்பமாயிருக்கிறாள்!

மிஷனரி மோகன கிருஷ்ணன் *CSI பெண்கள் ஐக்கியத்தின்* (ஹசான்) 22 பெண்களுக்கு செய்தி யளித்து உற்சாகமூட்டினார். குஜராத் *சீடத்துவப் பயிற்சி முகாமில்* 4 செய்திகள் அளித்தார். காத்தரின் மோகன கிருஷ்ணன் ஹசானிலுள்ள தாதியர் கல்லூரி மாணவிகளுக்கு ஆங்கிலம் பேசக் கற்றுக் கொடுக்கிறார். சும்மாடியில் நடந்த *பஞ்சாரா ஒடுக்கக் கூட்டத்தில்* 19 பேர் பங்கேற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். இராமதுர்கில் 35 பஞ்சாரா மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இவர்களுக்குள் ஊழியம் செய்ய தேவன் பஞ்சாராப் பணியாளரை எழுப்ப ஜெபியுங்கள்.

ஜமக்கண்டியில் மிஷனரி சதமால் தேவனுடைய வார்த்தையினால் மக்களை உலுக்கியபோது ஏறத்தாழ 150 விசுவாசிகள் எழுப்புதல் மழையை அனுபவித்தனர்.

ஜமக்கண்டி மற்றும் அதின் அருகாமையிலுள்ள இடங்களிலிருக்கும் தேவதாசிகளின், அநாதைகளாக விடப்பட்ட பிள்ளைகளுக்காக சிறப்பாக ஜெபியுங்கள்.

தேவன் **மத்தியப்பிரதேசத்தில்** பெரும் காரியங்களைச் செய்துவருகிறார். மிஷனரி ஜேசனும் நமது பங்காளர் டெரன்ஸ் அனுராகும் மாவாசி ஆதிவாசிகளுக்காக பாரப்பட்டவர்களாய் பைக்கில் ஒன்றரை நாட்கள் பயணித்து அவர்களை அடைந்தனர். மாவாசியாகிய ராஜ்குமார் அவர்களைத் தன் சகோதரன் முன்னாலாலிடம் அழைத்துச் செல்ல அவர் இவர்களை மறைந்துகிடந்த இரண்டு கிராமங்களுக்குக் கூட்டிச் சென்றார். தேவனது அன்பு மக்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டது. இரவை முன்னாலாலின் வீட்டில் கழித்தனர். முன்பின் தெரியாதோருக்கு முன்னாலாலின் உபசரிப்பு மெச்சத்தக்கது. இவர்களது எண்ணிக்கை குறைந்து வருவதால் இவர்கள் இல்லாமலே போகக்கூடும். சரியான போஷாக்கின்மையால் மரிப்பது சகஜம். இம்மக்களின் உள்ளத்தை இறைவன் திறக்கும்படியாக ஜெபியுங்கள்.

அரைமணி நேரம் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி அளிக்கும்படியாக நமது வாலிபருக்கு சாகர் வானொலி நிலையம் கொடுத்த அழைப்பின் மூலம் சாகர் பகுதியில் நற்செய்தி தெளிவாக அறிவிக்கப்பட்டது. நமது வாலிபர் சிலர் '*நம்பிக்கை மையம்*' என்றொரு ட்யூஷன் மையம் திறக்கத் திட்டமிடுகின்றனர். நற்செய்தியைக் கடத்த எடுக்கப்படும் இம்முயற்சிக்காக ஜெபியுங்கள்.

சபை பாகுபாடற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி முதல் மந்திரியின் வீட்டில் (BJP அரசு) நடத்தப்பட்டது. ஆயிரம் பேருடன் நமது மிஷனரிகள் டாக்டர் ஜெய்சங்கரும் ஃபிளாரன்சும் பங்கேற்றனர். அதில் அவர்களது மகன் வெஸ்லி, ECI சபைக் குழுவினருடன் சேர்ந்து பஞ்சாபி நடனமாடினான். மூன்று ஆயர்கள் தேவவார்த்தையைப் பகிர்ந்து கொண்டனர். முதல் மந்திரி அந்த 2 மணிநேரமும் வீற்றிருந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! வருங்காலத்தில் என்னதான் நடக்காது!

**மகாராஷ்டிரா** காப்சி கிராமத்திலுள்ள கொசாவி இனத்தவர் மத்தியில் நற்செய்திக்கு நல்ல வரவேற்பிருப்பதற்காக தேவனைத் துதியுங்கள். இவர்கள் குப்பையில் பொருள் சேகரிப்பவர். சிலர் ஆராதனைக்கு வருகின்றனர். இக்கிராமத்திலுள்ள, இரண்டு கால்களும் விளங்காத சரிதா என்ற விசுவாசிக்காக ஜெபியுங்கள். மோகன், ராதிகா, ஷீத்தல், வைஷாலி இவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய ஜெபியுங்கள். பல போராட்டங்களின் மத்தியில் வீட்டைக் கட்டிமுடித்த விசுவாசி பிரமிளாவிற்காக தேவனைத் துதியுங்கள்.

21 பெரியவரும் 5 பிள்ளைகளும் கோயம்புத்தூரிலிருந்து சகோதரன் நடராஜன் தலைமையில், மிஷனரிகளுடன் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதற்காக கார்கோட்டியில் 2011 டிசம்பர் 25-27 செலவிட்டனர். என்ன ஆனந்தம். ராதாநகரி, கார்கோட்டி, பன்டேவாடி, முருகூடு போன்ற இடங்களில் தேவவார்த்தையைப் பகிர்ந்து கொண்டனர்.

**இராஜஸ்தானில்** சுவாரஸ்யமான காரியங்கள் நடக்கின்றன. நமது வாலிபப் பங்காளர் 17 பேர், ஆயர் பால் *(சீயோன் ஐக்கியம்,* ஹைதராபாத்) தலைமையில் *பில்* பணித்தளத்தைச் சந்தித்தனர். நம்மைத் தாங்க ஒரு உறுதியான ஐக்கியம் உண்டென்பதை அறிந்து விசுவாசிகளும் ஊழியரும் உவகை கொண்டனர். குழுவினரும் மிகுந்த உற்சாகத்துடன் பணிக்களச் சவால்களுடன் திரும்பிச் சென்றனர்.

60 பேர் பங்காளர் கூடுகையில் பங்கேற்றனர். சத்திஸ்காரிலிருந்து வந்த திரு. ராஜாதாஸ் செய்தியளித்தார். இரண்டு மிஷனரிகள் களச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். கிறிஸ்டியன் கஞ்சில் திரு. இன்னசென்ட் மாசி வீட்டில் நின்று போயிருந்த ஜெபக்குழு மறுபடியும் துவங்கப்பட்டது. இப்போது 10-13 பேர் ஒழுங்காக வருகின்றனர். 18 வாலிபர் கிரமமாகப் பங்குபெறும் கைலாசபுரி ஜெபக்குழு வெற்றிநடை போடுகிறது. பஞ்சசீலிலுள்ள திருமதி தாஸ் வீட்டில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டு 10-12 பேர் பங்கேற்கின்றனர். மூவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் உடலில் அங்கங்களாயினர். அமிதி ஜெபக்குழு அங்கத்தினர் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. கல்லூரி நேரத்திற்குப் பிறகு மாணவரை மிஷனரிகள் இரகசியமாய் சந்தித்து வருகின்றனர். ராஜ்புட் இனத்தவரான தீரஜ் தேவனை அறிய வாஞ்சையாயுள்ளார்.



*மியாத்தி கிராம விசுவாசிகள்*

பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் நற்செய்தியை எடுத்துச் செல்ல திட்டங்கள் உருவாகிக்கொண்டுள்ளன. மோட்சியில் 12 வாலிபர் சாயங்கால ஜெபத்தில் ஒழுங்காக கலந்துகொள்கின்றனர்.

எவ்வித தொடர்புமின்றி நமது பெண்கள் குழு விசுவாசத்தோடு ஜெயின் கல்லூரி சென்றனர். தேவன் அவர்களது விசுவாசத்தைக் கனம்பண்ணி மூன்று நங்கையரை சந்திக்கச் செய்தார். அவர்களுக்கு சாட்சி

சொல்லிக்கொண்டிருக்கும்போது இன்னும் சில பெண்கள் இணைந்து கொண்டனர். இவர்களில் எவருமே எப்பொழுதுமே நற்செய்தியைக் கேட்டதில்லை.

**தமிழ்நாடு** புங்கமடுவில் (அரணூத்து மலை) மிஷனரிகள் ஆராதனை நடத்தும் ஒரு விசுவாசியின் மூங்கில் கொட்டகை தீப்பிடித்து ஒரு லட்சம் மதிப்பான பொருட்கள் சேதமாயின. சில தென்னைகளில் இடி விழுந்தது. ஒரு விசுவாசியின் சில ஆடுகள் மரித்துப் போயின. இப்படிச் சம்பவங்களினால் அவிசுவாசிகள் விசுவாசிகளை கேலி செய்கின்றனர். ஆலடிப்பட்டி ஆலயம் புதுப்பிக்கப்பட ஜெபியுங்கள்.

இருதய நாள நோயினால் மரணத்தின் வாயிலிருந்த மோகனுக்காக நீங்கள் ஏறெடுத்த ஜெபங்களுக்காக நன்றி. சுகமடைந்து சிட்லிங் பணித்தளத்தில் நமக்குப் பேருதவியாகவுள்ளார். இராஜசேகரும் விமலா இராஜசேகரும் சிட்லிங் பணித்தளத்தில் மிஷனரிகளாக இணைந்துள்ளனர்.

சிட்லிங் ஆலயம் கட்டப்பட்டு 21 வருடங்களா கின்றன. மரத்தாலான மேற்கூரை கரையானால் சேதமடைந்துள்ளது. சீர்செய்ய ரூ.60,000 செலவாகும், S. தாதம்பட்டி ஆலயத்தினருகே மிஷனரி தங்க வீடு தேவை (2,28,000.00). வாச்சாத்தி ஆலயத்திற்கும் மிஷனரி தங்க இடமும் ஆழ்துளைக் கிணறும் தேவை (2,50,000.00) சிட்லிங் பள்ளத்தாக்கு தேனீக்கூடாய் செயல்படுவதால் முக்கியமான கூடுகைகள், பார்க்க வரும் பங்காளர்கள், விடுமுறை வேதாகமப் பள்ளி, வேனிற்கால பயிற்சி முகாம்களுக்காக கழிவறை மற்றும் குளியலறைகள் தேவை (1,25,000.00). தேவைகளுக்காக ஜெபியுங்கள். தேவன் கொடுக்கும்போது, தடைபட்டு நிற்கும் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

சித்தேரி மலையில் நடைபெறும் வாலிபர் விண்ணொளி முகாமிற்கு 1400 வாலிபர் வந்து ஆசீர்வாத மழையில் நனைந்தனர். மேலும் விபரங்கள் அடுத்த இதழில்.

**உத்திரப் பிரதேசத்தில்** ஊழியர் எண்ணிக்கை கூடுகிறது; ஆகவே ஊழியமும் விரிவடைகிறது. மிஷனரிகள் ஜியாபூர், ஜமுவான், ஹடோரா, படேவார், கோட்டியா ஆகிய கிராமங்களைச் சந்தித்தனர். 27 கிறிஸ்தவ குடும்பங்கள் சந்திக்கப்பட்டு ஆராய்ச்சி வேதாகமங்களும் பிற இலக்கியங்களுமாக ரூ. 7330 ற்குக் கொடுக்கப்பட்டன.

ஷாஹாப்பூரில் 2 எருமைகள் நோய்வாய்ப்பட்டன. நமது உள்ளூர் ஊழியர் ஜெபித்ததில் சுகம் பெற்றன. உரிமையாளர்கள் ஆராதனையில் கலந்துகொண்டு சாட்சி பகிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினர்.

திருமதி கலா நியூட்டன் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக்கூட்டம் பல வாசல்களைத் திறந்துவிட்டிருக்கிறது. ஜான்சிக்கு அருகேயுள்ள கிராமத்தில் நடைபெறும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியர் பயிற்சி முகாமில் செய்தியளிக்க நமது மிஷனரி சரவணன் அழைக்கப் பட்டார். திருமதி விநோதினி சிங்கின் வீட்டு வேத ஆராய்ச்சி வகுப்பில் கலந்து கொள்வோர், வேதசத்தி யங்களுக்குத் தங்கள் கண்கள் திறக்கப்படுகிறதாக சாட்சி பகர்கின்றனர். திருமதி எஸ்தர் வீட்டில் வாலிபருக் கென்று வேறொரு வேத ஆராய்ச்சி வகுப்பு துவங்கப் பட்டுள்ளது. வாலிபப் பையன்களும் நங்கையரும் உற்சாகமாகப் பங்கு கொள்கின்றனர். ஒரு LCD புரொஜெக்டர் இருக்குமானால் இவ்வகுப்புகளுக்கு அதிகம் பயன்படும்.

**மேற்கு வங்க** செய்திகள் சுவையாயுள்ளன. மிஷனரிகள் செழியனும் பிரேமலதாவும் மேற்கு வங்கத்தில் ஊறிவிட்டனர். விசுவாசிகளுக்காக செங்கமாயி நதிக்கரையில் பிக்னிக் ஒழுங்குசெய்தனர். அதில் 60 பேர் பங்குபெற்று ஐக்கியத்தில் மகிழ்ந்தனர். 14 பேர் தேவனோடு உடன்படிக்கை செய்து கர்த்தரது பந்தியில் பங்கேற்றனர். கோஷ்புக்கூர் வாலிபர் ஜெபக்குழுவினர் மதிய உணவை ஆயத்தம் செய்தனர்.

மிஷனரி ஸ்டெல்லாவிற்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. பிரவீனும் அவரது மனைவியும், எலியாஸ், நையாரி, காபிரியேலும் அவரது மனைவியும் இயேசு கிறிஸ்துவைத் தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். நமது மிஷனரிப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் ஜோதின் கடின உழைப்பாளி. ஒரே மகனாகையால் சுகவீனமாயிருக்கும் தாயை கவனிக்கப் போகவேண்டியதாயிற்று. தாய் சுகத்திற்காகவும் ஜோதினின் எதிர்காலத்திற்காகவும் ஜெபியுங்கள்.

சத்பள்ளி, காயிரியோஜுட், சிங்கிப்பேட்டா, கத்தோபேட்டா மற்றும் சப்பாத்தியில் ஆராதனைக் கூடங்கள் அவசியமாயிருக்கிறது. தேவைகள் அதிகம். தேவன் எல்லாத் தேவைகளையும் சந்திக்க ஜெபியுங்கள்.

**தலைமையகம்** நரம்பு மையமாகச் செயல்படுவதினால் விசேஷித்த ஜெபம் தேவை. தெரசாவிற்காக உங்கள் ஜெபத்திற்கு நன்றி. உடல்நலத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது. பால் வசந்த் காட்பாடி ரயில் நிலையத்தில் கைப்பிரதிகள் விநியோகித்தார். கண் அறுவை சிகிச்சையான 25 பேருக்கு நற்செய்தி அறிவித்தார். நந்தியால் கிராமத்தில் நடந்த நற்செய்திப் பெருவிழாவில் 500 பேருக்கு நற்செய்தியளித்தார்.

கணக்கு வேலையாக ஜெயசிங் பல மாகாணங்களில் பயணிக்கவேண்டியுள்ளது. பயண கிருபைகளுக்காக ஜெபியுங்கள். பிரிசில்லாவின் தாயார் வேதாகமப் பெண். அவர்களது ஊழியத்திற்காக ஜெபியுங்கள். வேதாகமப் பெண்ணை தாயாகப் பெற்றிருப்பது எத்தனைப் பெரிய சிலாக்கியம்! தலித்தா ஆங்கிலம் மற்றும் தமிழ் பத்திரிகைகள், புத்தக மறுபதிப்புகள், செய்திமடல்கள் தட்டச்சு செய்கிறாள். ஜெரிஷா மனிதவளத் துறையைப் பொறுப்பாகப் பார்க்கிறாள். ஆன்டனியும், மெர்சியும் தங்களது பத்தாவது மணநாளை மகள் நான்சியுடனும் ஜெபக்குழு மாணவ மாணவியருடனும் கொண்டாடினர்.

தலைமையக மேலாளர் கேசவன் சைனஸ் நோயிலிருந்தும் வீசிங்கிலிருந்தும் சுகம்பெறவும் இவரது தகப்பனின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள். பொற்கொடி இணைந்ததிலிருந்து தேங்கியிருந்த பல வேலைகள் முடிவடைகின்றன.

**ஊழியர்** யாவரும் *ஜீவசுவாசம்* போட்டியில் பங்கேற்று அது தங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஊழிய வாழ்விற்குப் பயனுள்ளதாக இருந்ததாக சாட்சி பகர்கின்றனர்.

கிராமங்களிலும் அந்தகர் பள்ளிகளிலும் சிறைச் சாலையிலும், தொழுநோய் மையங்களிலும் மற்றும் பல இடங்களில் மிஷனரிகள் கிறிஸ்துமஸ் கொண்டாடினர். தாளையே பார்த்துக்கொண்டு நேரடி ஊழியத்திற்கு நேரமில்லாதிருக்கும் மிஷனரிகள், தேவனுக்காய் தாங்கள் செய்யும் அலுவலக ஊழியத்தில் நிறைவுகாண ஜெபியுங்கள். அதிக பட்சமான மிஷனரி குழந்தைகள் கிறிஸ்துமசைத் தம் பெற்றோருடன் செலவிட்டனர். சிலருக்கு அந்த சிலாக்கியம் கிட்டவில்லை. இறையரசை விஸ்தாரமாக்கும் பணியில் இந்த விலையேறப்பெற்ற தியாகத்தைச் செய்யும் பெற்றோருக்காக ஜெபியுங்கள்.

தைராய்டு அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் திருமதி ஷாந்த கௌடாவிற்காக ஜெபியுங்கள். வீசிங்கில் அவதியுறும் சுகந்தினிக்காக தேவனைக் கூப்பிடுங்கள். ஜோசபின் சித்ஹியின் கர்ப்பப்பையிலிருந்து 3 கிலோ கட்டி அகற்றப்பட்டது.

சுமங்கலி ஜெரேமியாவின் 60 வயதான தாய் குறுகிய கால சுகவீனத்திற்குப் பிறகு டிசம்பர் 12 அன்று மகிமை எய்தினார்கள். ஜெபிக்கும் இந்தத் தாய் தினமும் 4 மணிநேரம் மிஷனரிகள் மற்றும் ஊழியங்களுக்காக ஜெபிப்பதோடல்லாமல் வேதத்தை 50ற்கும் அதிகமான தடவை படித்திருக்கிறார்கள். சுமங்கலி தன் தாய், தகப்பன் இருவருடைய அடக்க ஆராதனையிலும் பங்கேற்க முடியாமல் போனது (9753509760).

திருமதி கிடியன் பானி (ஒடிசா) மோட்டார் பைக்கிலிருந்து கீழே விழுந்ததில் இடுப்பு எலும்பு முறிந்தது. அவர்களுக்கு வலிப்பு நோயுமிருப்பதால் வேலூர் CMCக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சை பெறுகிறார்கள்.

**ஊழியர் குழந்தைகளே** நமது எதிர்காலத் தூண்கள். உங்கள் தினசரி ஜெபத்தில் அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். அப்பலசாமி தம்பதியரின் (ஆந்திரா) 8 மாத மகன் ஈனோஷ், பிறவி இருதய குறைக்காக அறுவை சிகிச்சைக்காக காத்திருந்தான். தர்ம இயக்கங்கள் மூலமாக செய்ய முயற்சி செய்தோம். ஆச்சரியவசமாக ஆந்திரா அரசாங்க இலவச சிகிச்சை பெற்று இப்போது தேறி வருகிறான். தேவனுக்கு துதி செலுத்துங்கள்!

சரவணன்-சுகந்தினியின் மகன் டின்டேலுக்கு கை எலும்பு முறிந்து தேவ கிருபையால் சிக்கலேதுமின்றி சுகமானது. அவனது வீசிங் குணமாக ஜெபியுங்கள். ஐந்தாவது பக்கத்திலுள்ள எஸ்மியின் கட்டுரையை ரசித்திருப்பீர்களென்று நம்புகிறோம். அவளது எழுத்து தாலந்திற்காக ஜெபியுங்கள்.

வசந்தா-கிறிஸ்மசின் மகள் வினயா (MCA) மற்றும் ஜூலி-பெரியசாமியின் மகள் ப்ரீத்தி வகுப்பில் முதன்மையாக இருப்பதற்காக தேவனைத் துதியுங்கள். மோத்தீசின் மகள் ரூத் (18) ஹெபடைடிஸ் B நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளாள்.

ஜெயா அன்பு-சாம் ஜோதிராஜின் மகன் ஸ்டீபன் ஜனவரி 27 அன்று நாசரேத் (தமிழ்நாடு) நேசப் பிரியாவுடன் பரிசுத்த விவாகத்தில் இணைக்கப்பட்டார். வாழ்த்துக்கள்! மணப் பெண்ணும் மணமகனும் ஊழிய வாஞ்சை உள்ளவர்கள்.

நீங்கள் எங்களுக்காக ஜெபிப்பதுபோல நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் ஜெபிப்பது அவசியம்.

பாளையங்கோட்டையில் ஒரு விபத்தில் உயிரிழந்த சகோதரன் லாரன்ஸ் ஜெயராஜின் மனைவி கிரேசின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள். இவர்கள் ஒரு மிஷனரியைத் தாங்குவதோடு நமக்கு காணிக்கையும் சேகரித்து வருகிறார்கள்.

டாக்டர் சுதாகரும் திருமதி ரூபி சுதாகரும் பல ஆண்டுகளாக நமது உறுதுணையாளர்கள். ரூபிக்கு புற்று நோய்க்காக 2 ஆண்டுகளுக்குமுன் அறுவை சிகிச்சை நடந்தது. இப்போது மறுபடியும் நோய் தோன்றியுள்ளது. இரு இளவயது பிள்ளைகளுண்டு.

ஊழியத்தின் பல கட்டிடங்களைப் பொறுப்பாகவும் சிறப்பாகவும் கட்டிக்கொடுத்த திரு. செல்வராஜிற்காக தேவனைத் துதிக்கிறோம். அவரது மகள் ப்ரீத்திக்கு வேலூரில் டிசம்பர் 5 அன்று திருமணமானது. தம்பதியரை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

உலகமெங்கும் ஒரு கொந்தளிப்பையும் பொருளாதாரச் சரிவையும் காண்கிறோம். துன்மார்க்கமும் வியாதிகளும் பெருகி வருகின்றன. எல்லாமே ஒரே திசையை நோக்கித்தான் விரலைச் சுட்டிக் காட்டுகின்றன — ஆண்டவரின் வருகை! செய்தித்தாள் ஒரு ஜெபச்சுற்றறிக்கை. தேவனுக்கு முன்பாக அதை விரித்து வைத்து மன்றாடுங்கள். உங்களது விண்ணப்பங்களைக் கேட்க தேவன் காத்திருக்கிறார்.

பிப்ருவரி பத்திரிகையை அச்சிட ஜனவரி 15 அன்று அச்சகத்திற்கு அனுப்பி வைப்பதால் உங்களுக்கு அது முதலாம் தேதி கிடைக்கிறது. இதனால் செய்திகள் உங்களுக்கு பிந்தியே வந்து சேருகின்றன. எடுத்துக் காட்டாக வாலிபர் விண்ணொளி முகாம் ஜனவரி 17 அன்று முற்றுப்பெறுவதற்குள் பத்திரிகை ஜனவரி 15 அன்று அச்சகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு விடுமாகையால் செய்தி உங்களுக்கு மார்ச் மாதமே வந்தடையும். புரிந்துகொள்வீர்களென்று நம்புகிறோம்.

மறுபடியும் சந்திக்கும்வரை தேவன் உங்களோடிருப்பாராக!

Registered with the Registrar of Newspapers
for India under No. 30301/73
Published on the 30th of every month

Postal Registration No. TN/CCN/411/09-11
Licensed to post without prepayment
WPP No. TN/CCN/31/09-11

# Stewardship Study Bible

**God is the Owner of everything. We are simply users, trustees or stewards. In this Study Bible you will discover God's design for life, the environment, finances, generosity, and eternity. The common theme in every feature of this Bible illustrates Matthew 25:23--**




***"You have been faithful with a few things; I will put you in charge of many things!"***

*** New International Version (NIV) ***
*** Centre-column References * Book Introductions ***
*** 365 one-page Stewardship Articles * Biblical Index on Money ***
*** Topical Index * Concordance ***
*** Hard Cover * 1906 pages * Published in 2009 ***

*"I recommend this thematic Study Bible highly!" - R. Stanley*

**You may buy this Bible in fine Christian Bookstores, or order with us.**
**Price Rs. 1400/- plus Rs. 100/- for forwarding**

**Blessing Literature Centre**
**21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600002**
***Tel: 00 91 44 28450411***

1971 முதல் எழுப்புதலுக்காகவும் மிஷனரிப் பணிக்காகவும் சபைப்பிரிவு பாகுபாடற்ற நிலையில் இயங்கிவரும் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BLESSING YOUTH MISSION) செய்திகளையும், செயல்களையும் இப்பத்திரிகை அறிவிக்கிறது.

நிறுவனர் : R. ஸ்டான்லி, B.E., M.Tech.,

ஒரு பிரதி : ரூ.10/-
ஆண்டுச்சந்தா : ரூ.100/-
ஆயுள் சந்தாதாரர்கள் (ரூ.1000/-) இப்பத்திரிகை மட்டுமல்ல, அவர்கள் சந்தாதாரரானதும் நாள் முதல் 15 வருடங்களுக்கு BYM வெளியிடும் புத்தகங்களையும் இலவசமாய்ப் பெறுவார்கள்.

பிற மொழிப் பதிப்புகள்:
அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்.

கடிதத் தொடர்புக்கும் காணிக்கை அனுப்பவும் முகவரி :
**BLESSING YOUTH MISSION**
**CHURCH COLONY, VELLORE - 632 006, INDIA (Tel : 0416-2242943, 2248943) <hq@bym-india.org>**

Printed by Paul Arasamuthan at M/s Bapuji Printers, 5 Kurban Ali Street, Woods Road, Mount Road, Chennai 600 002 and Published by V. Ashok Immanuel on behalf of Blessing Ministries, No.21 West Coovam River Road, Chintadripet, Chennai 600 002. Editor : J.D. Sapphire